www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

TSI10T

தென்காசி மாவட்டம்

முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு 2024

வகுப்பு 10

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 8×1=8**

1) "மெத்த வணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெருங்கலன்களும்

இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) "சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" - என்றவர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார்

இ) சச்சிதானந்தன் ஈ) இளங்குமரனார்

3) "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய

இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

4) "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5) "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் "பாக்கம்" என்பது

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

6) "அன்பால் கட்டினார்" - இதில் உள்ள வேற்றுமை?

அ) இரண்டாம் வேற்றுமை ஆ) மூன்றாம் வேற்றுமை

இ) நான்காம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

**பாடலைப் படித்து விடை தருக:**

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறோர் புகழுரையும்"

7) உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ்மொழியை

இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

8) வேறோர் புகழுரையும் - இத்தொடரில் 'வேறோர்' என்பது

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக: (16 கட்டாய வினா) 6×2=12**

9) பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் சிலவற்றைக் கூறுக.

10) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

11) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

12) வசன கவிதை - குறிப்பு வரைக.

13) "இறடிப் பொம்மல் பெறுகுவீர்" - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14) பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

15) **கலைச்சொல் தருக:**

அ) Modern Literature ஆ) Tempest

16) ''பாடலோடு பொருந்தாவிடில் இசையால் பயன் இல்லை
இரக்கம் இல்லாவிடில் கண்களால் பயன் இல்லை'' எனும் பொருள் தரும் திருக்குறளை எழுதுக.

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக: (17 - கட்டாய வினா)** **4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக:**

'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் பாடல்

**(அல்லது)**

'விருந்தினனாக' எனத் தொடங்கும் பாடல்

18) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

19) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

20) சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

21) ''பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளரோ?'' - வினவுவது ஏன்?

22) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளை குறிப்பிட்டு விரித்து எழுதுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **2×5=10**

23) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**உ) விரிவான விடையளிக்க:** **1×8=8**

25) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

**(அல்லது)**

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

----------